ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்த முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு, 108 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 111 இன் பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகத்துடன் இணைந்த முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு வட்டி வருமானமாக ரூபா 21,203,277 தொகை சீராக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 21,035,246 ஆக சீராக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் முன்னைய ஆண்டின் இறுதியளவில் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த ரூபா 66,555,653 கிரயமான கட்டிடம் மற்றும் மோட்டார் வாகனங்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதற்கமைய அந்த சொத்துக்களின் பெறுமானத்தேய்வு விகிதத்தினை மதிப்பீடு செய்யும் போது ஏற்பட்ட வழுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இற்கமைய மீளமைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலையான சொத்துக்களின் மீள் மதிப்பீட்டு பெறுமதி வெளியிடப்பட்டுள்ள போது அது தொடர்பில் போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நியமத்தின் 86 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட இரசாயன ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்களின் பெறுமதி, பெறுமானத்தேய்வு விகிதம் மற்றும் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ஆகியன கணக்கு பதிவுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இரத்துச் செய்யப்பட்ட ரூபா 28,536 தொகையான காசோலையொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது வங்கி இனக்கக்கூற்றுக்களுக்கமைய வழங்கப்பட்ட போதிலும், வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலையொன்றாக காண்பிக்கப்பட்டமையால், காசுப் புத்தகத்திற்கமைய வங்கி மீதி மற்றும் செலவினம் அந்த அளவினால் முறையே குறைத்தும் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிற்காக பாடநெறிக் கட்டணங்களுக்காக தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக ரூபா 1,354,756 தொகையான பணம் 2017 பெப்ரவரி மாதத்தின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது அட்டுறு செலவினமாக நிதிநிலமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த 24 மாதங்கள் கொண்ட பாடநெறியொன்றிற்காக 45 விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். ஒரு விண்ணப்பதாரியின் பாடநெறிக் கட்டணம் ரூபா 575,000 ஆனமையால், அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்த பாடநெறிக் கட்டண வருமானமாக ரூபா 25,875,000 தொகையில் மீளாய்வாண்டிற்கு உரிய வருமானம் ரூபா 6,468,750 ஆன போதிலும், அது ரூபா 5,228,750 ஆக அல்லது ரூபா 1,240,000 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் 2007 ஆம் ஆண்டின் போது டுபாய் நகரத்தில் சர்வதேச கிளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மோசடி ஒன்றின் காரணமாக 2009 செப்தெம்பர் மாதத்தில் அக்கிளை மூடப்பட்டிருந்த போதிலும், அக்கிளையிலிருந்து பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளாக முறையே ரூபா 2,079,000 தொகை மற்றும் ரூபா 11,603,217 தொகையும் நீண்ட காலமாக காணப்பட்ட போதிலும், அந்த மீதிகள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது நிதிநிலமைக் கூற்றில் முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்டது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது ஓய்வு பெற்றுச் சென்ற நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் மற்றும் பிரதி நிதியாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 2,874,482 கூட்டுத்தொகையான மற்றும் ரூபா 1,018,174 கூட்டுத்தொகையான நலன்புரி நிதியக் கடன் மற்றும் இடர்க்கடன் ஆகியவற்றை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

-------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| **(அ) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவை** | |
| (i) 9 ஆம் அத்தியாயத்தில் 5.1(அ) ஆம் பிரிவு மற்றும் 7 ஆம் அத்தியாயத்தில் 21.1 மற்றும் 21.3 ஆம் பிரிவுகள் | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிறுவகத்தின் சிரேஷ்ட உதவி பதிவாளருக்கும் கட்டமைப்பு பகுப்பாய்வாளர் I ஆம் தரத்தின் உத்தியோகத்தர் ஒருவருக்கு மேலதிக நேர படிகள் மற்றும் வருடத்தின் அனைத்து விடுமுறைத் தினங்களுக்குமாக விடுமுறைத்தின படிகளாக ரூபா 1,410,600 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 26 ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடையும் திகதியில் நிறுவகத்திற்குச் சொந்தமான அனைத்து உருப்படிகள் மற்றும் நிலையான சொத்துக்கள், அந்த பணிக்காக நியமிக்கப்படும் மதிப்பாய்வுக் குழுவினால் திருத்தம் பார்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தின் வாசிகசாலை புத்தகங்கள் தொடர்பில் மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| நிதிப்பிரமாணம் 135 | வெற்றிடமாகக் காணப்பட்ட புத்தக பராமரிப்பாளர் பதவியினை மேவுகை செய்வதற்கு கணனி உள்ளீட்டு உதவியாளர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், காசுப் புத்தகத்தினை பேணுதல், வங்கி இணக்கக் கூற்றுக்களை தயாரித்தல், மூலப் பதிவேடுகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளை பேணிச் செல்லல், கனணியுடன் தொடர்புடைய கணக்கு நடவடிக்கைகள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை தயாரித்தல் மற்றும் காசுப் பொறுப்பாளரின் பதவியினை மேவுகை செய்தல் போன்ற பணிகள் அனைத்தும் அந்த பெண் உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | (i) பதவிநிலைத் தரமுடைய உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் செயல்நிமித்த உட்கட்டுநிதி வழங்க முடியுமான போதிலும், பதவிநிலைத் தரமற்ற தட்டச்சாளர், சாரதி மற்றும் இயந்திர இயக்குனர் போன்ற பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது 11 சந்தர்ப்பங்களில் ரூபா 1,375,500 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>(ii) செயல்நிமித்த உப கட்டுநிதியின் ஆகக்கூடிய எல்லையான ரூபா 100,000 இனை விஞ்சி இரு உத்தியோகத்தர்களுக்கு 07 சந்தர்ப்பங்களில் ரூபா 1,282,000 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>(iii) 2016 ஆம் ஆண்டிற்கு உரியதாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,619,400 கூட்டுத்தொகையான 04 முற்பணங்கள் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் உபபாகங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைய நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பபட்டிருக்கவில்லை. |
| (உ) | 2009 இன் 9 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் iii ஆம் உபபிரிவு | காலாண்டு முடிவடைந்து அதற்கடுத்த மாதத்தின் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும், குறித்த வரிப்பணம் 5 நாட்கள் முதல் 68 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | 2015 Mf];l; 31 Me; jpfjpa 241.4 Mk; ,yf;f gzpg;ghsu; rigapd; jPu;khdk; | நாளொன்றுக்கு 08 மணித்தியாலங்களை விட அதிகமாக பணிபுரியும் நாளொன்றிற்காக எரிபொருள் படிகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும், 08 மணித்தியாலங்களை விட குறைவாக பணியாற்றிய நாட்களும் எரிபொருள் படிகளை செலுத்துவதற்கான கணிப்பீட்டிற்காக கருத்தில் கொள்ளப்பட்டிருந்தமையால், ஆண்டினுள் ரூபா 365,400 தொகையான எரிபொருள் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 92,366,483 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 40,054,887 ஆகக் காணப்பட்டமையால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 52,311,596 ஆன வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான பாடநெறிக் கட்டண வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 93,969,136 இனால் அதிகரித்தமை இந்த வளர்ச்சிக்கு பிரதானமாக காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகளில் கிரயமான வீழ்ச்சியொன்றினைக் காண்பித்த போதிலும், 2015 ஆம் ஆண்டு முதல் அதிகரித்தவாறு காணப்பட்டது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் வரி ஆகியவற்றை மீள சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 81,701,992 ஆக காணப்பட்ட பங்களிப்பானது மீளாய்வாண்டின் போது ரூபா 188,991,962 வரை அதிகரித்திருந்தது.

### 3.2 செலவினங்களின் அசாதாரண அதிகரிப்பு

முன்னைய ஆண்டின் செலவினத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களில் அசாதாரணமான அதிகரிப்பொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| செலவினம் | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு | வேறுபாடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| வெளிநாட்டு பிரயாண செலவினம் | 1,477,653 | 357,752 | 1,119,901 | 313 |
| காகிதாதிகள் செலவினம் | 18,237,575 | 3,540,866 | 14,696,708 | 415 |
| உபசரணைச் செலவினம் | 2,218,100 | 1,051,639 | 1,166,461 | 111 |
| வங்கிக் கட்டணம் | 1,002,702 | 210,229 | 792,473 | 377 |
| பட்டமளிப்பு விழா செலவினம் | 6,342,937 | 1,405,000 | 4,937,937 | 351 |

### 3.3 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டச் சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் முன்னாள் பிரதி நிதியாளரினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் ஸ்ரீ ஜயவர்தரனபுர பலக்லைக்கழகத்திற்கும் எதிராக தொழில் நியாய சபையில் தாக்கல் செய்யப்பட்டிருந்த LT/01/05/2012 ஆம் இலக்க வழக்கு தொடர்பாக தலையிடும் பிரதிவாதி ஒருவராக நிறுவனத்தை பெயரிடப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் டுபாய் கிளையின் ரூபா 58.2 மில்லியன் மோசடி தொடர்பாக 2009 ஆண்டின் போது நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் அறிக்கையின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த விதப்புரைகளின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்வதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு 2011 மார்ச் 29 ஆந் திகதி சாட்டப்பட்டிருந்தது. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் குறித்த விசாரணை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக 2014 யூன் 16 ஆந் திகதி பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்தினால் அது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது நிறுவகத்தினால் வியாபார நிர்வாக அதிபர் சுங்கம் மற்றும் சர்வதேச வியாபாரம், நிறைவேற்று வியாபார நிர்வாக அதிபர் மற்றும் வியாபார நிர்வாக அதிபர் (கத்தார்) ஆகிய புதிய பட்டப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 முகாமைத்துவத் தொழிற்பாடுகள்

பொருள் அல்லது சேவையின் விநியோகத்திற்காக பெறுமதியில் ஒரு பகுதி முன்னர் செலுத்த நேரும் சந்தர்ப்பங்களின் குறித்த நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட பகுதிப் பணம் செலவினத்தின் ஒரு பகுதியாக அல்லது தவணைக் கொடுப்பனவாக கருதி வேறாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக அவை செயல்நிமித்த உப கட்டுநிதிப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய மீளாய்வாண்டினுள் 27 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 13,495,132 தொகை இவ்வாறு செயல்நிமித்த உப கட்டுநிதி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

### 4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

மீளாய்வாண்டின் செப்தெம்பர் 18 ஆந் திகதி முதல் 27 ஆந் திகதி வரையிலும் ஜேர்மனியில் பென்க்பர்ஸ்கூல் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்ட கடன் முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக 07 உள்நாட்டு பயிலுனர்கள் மற்றும் நிறுவகத்தின் இரு உத்தியோகத்தர்களும் பங்குபற்றியிருந்தனர். இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 575,000 படி வெளிவாரி நிறுவனங்களின் 07 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 4,025,000 கிடைத்திருந்ததுடன், நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் ரூபா 7,330,731 ஆகும். அதற்கமைய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிறுவகத்திற்கு ரூபா 3,305,731 தொகையான நட்டமொன்று ஏற்பட்டுள்ளதாக கணக்குகளுக்கமைய அவதானிக்கப்பட்டதுடன், இது தொடர்பில் தொடர்ந்தும் பரிசீலனை செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பாடநெறி 04 நாட்களுக்காக திட்டமிடப்பட்டிருந்ததுடன், செல்வதற்கும் வருவதற்கும் எடுக்கும் இரண்டு தினங்களுக்கு மேலதிகமாக கூடுதலாக 04 தினங்கள் பங்குபற்றியோரால் ஜேர்மனியில் கழிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 04 மேலதிக நாட்களுக்காக நிறுவகத்தின் இரு உத்தியோகத்தர்களுக்கும் கூட்டிணைந்த படிகள் மற்றும் அமைய படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன், அனைத்து பயிலுனர்களுக்காகவும், அந்த மேலதின 04 நாட்களுக்காக தங்குமிடக் கட்டணங்களும் செலுத்தப்பட்டிருந்தன. இதற்கமைய அந்த மேலதிக காலத்திற்காக நிறுவகம் ரூபா 1,448,470 தொகையான செலவினை மேற்கொண்டிருந்தது.

(ii) 2015 மே 12 ஆந் திகதிய மு.அ.01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 02 (இ) பிரிவிற்கமைய நிறுவகத்தினை பிரதிநித்துவப்படுத்தும் குழுவிற்கு அந்த பணிக்கு தேவையான ஆகக் குறைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையே உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், 07 பயிலுனர்களை கொண்ட குழுவினை முகாமை செய்வதற்கு நிறுவகத்தின் இரு உத்தியோகத்தர்கள் பங்குபற்றச் செய்திருந்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாகும்.

(iii) மேற்படி பாடநெறிக்காக வெளிவாரி நிறுவனங்களிடமிருந்து பயிலுனர்களாக பங்குபற்றச் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்காக ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 575,000 படி அறவிடப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக நபரொருவருக்காக ரூபா 669,243 தொகையான செலவினத்தை நிறுவகத்திற்கு செலவிட நேர்ந்திருந்தது. அதற்கமைய ஒவ்வொரு பயிலுனருக்காகவும் ரூபா 94,243 படி ரூபா 659,701 தொகையான மேலதிக செலவினமொன்றை மேற்கொள்ள நிறுவகத்திற்கு நேர்ந்திருந்தது.

**4.4 நிதியங்களின் குறைப்பயன்பாடு**

--------------------------------------------

நிறுவகத்தின் மாதாந்த கொடுப்பனவுகள் ரூபா 13 மில்லியன் முதல் ரூபா 27 மில்லியனுக்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்ட போதிலும், செலவினம் தொடர்பாக சரியான எதிர்வுகூறாமையால் ஆண்டு முழுவதும் ரூபா 17.03 மில்லியனுக்கும் ரூபா 83.70 மில்லியனுக்கும் இடைப்பட்ட மிகவும் உயர்வான வீச்சிலான காசு மீதியொன்று பிரதான நடைமுறைக் கணக்கில் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

**4.5 பதவியணியினர் நிருவாகம்**

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 48 பேரினைக் கொண்டிருக்க வேண்டும். எனினும் 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கல்விசார் பதவியணியில் 8 பதவிகள் மற்றும் கல்விசாரா பதவியணியில் 12 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பதிலாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குப் பதிலாக ஒப்பந்த அடிப்படையில் 11 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கணக்குப் பிரிவிற்காக போதியளவான அனுபவம் வாய்ந்த பதவியணியை இணைத்துக்கொள்ளாமையால் சரியாக கணக்குப் பதிவேடுகளை பேணிச் செல்வதற்கு நிறுவகத்தினால் இயலாதிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினரை மிகைத்து கணனி உள்ளீட்டு உதவியாளர் மற்றும் சாரதியொருவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குள் உள்ளடக்கப்படாத நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பதவிக்காகவும் 4 பேர் முறையான அங்கீகாரமின்றி இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

**4.6 வாகனப் பயன்பாடு**

----------------------------------

2015 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 13/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிறுவக சுற்றறிக்கைக்கமைய ஒதுக்கப்பட்ட வாகனமொன்று பயன்படுத்துவதற்கோ அல்லது கடமைகளுக்காக பிரத்தியேக வாகனங்களைப் பயன்படுத்துவதற்காக போக்குவரத்து படியினை பெறுவதற்கு உரித்துடைய நிறுவகத்தின் பணிப்பாளரால் குழாம் வாகனமொன்று தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய சுற்றறிக்கைக்கமைய அந்த உத்தியோகத்தருக்கு ஒரு மாதத்திற்கு உரித்தான எரிபொருள் அளவினை மிகைத்து மீளாய்வாண்டிற்காக ரூபா 212,063 பெறுமதியான 1,813 லீட்டர் எரிபொருள் அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

நிறுவகத்தினால் 2017 ஏப்ரல் 04 ஆந் திகதி வருடாந்த அறிக்கைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2017 ஒக்தோபர் 31 அந் திகதி அந்த கணக்குகள் மீண்டும் திருத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள 11 விடயங்கள் வரை காணப்பட்டதுடன், ஆண்டினுள் எந்தவிதமான கணக்காய்வு பணியும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினரால் மேவுகை செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்தின் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக நிறுவகத்தின் கணக்காய்வு பணிகளையும் நிறைவேற்றுவதற்கு போதியளவான எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் அந்த பிரிவில் இல்லாதிருந்ததுடன், பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் எழுதுவினைஞர் தரத்திலான உத்தியோகத்தர்களை மாத்திரம் பதவியணி கொண்டிருந்தது.

### 5.3 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டத்திற்கமைய ரூபா 130 மில்லியன் செலவிடப்பட்டு நிறுவகத்திற்காக கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், குறித்த கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2017 நவம்பர் மாதம் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம் ஆகியவற்றுக்கிடையில் 48 சதவீதமான விலகலொன்று அவதானிக்கப்பட்டதுடன், 7 செலவின விடயங்களின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் ஆகியவற்றுக்கிடையே 15 சதவீதம் முதல் 135 சதவீதம் வரையிலான விலகல்கள் அவதானிக்கப்பட்டன. அதற்கமைய பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வாடகை மற்றும் குத்தகை செலவினம் ரூபா 301,230 செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக பாதீட்டு ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | ---------------------------------------- | ------------------------ |
| (அ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்கள் மீள்மதிப்பீடு, அகற்றுதல் மற்றும் அது தொடர்பாக கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை. |
| (ஆ) | கணக்கீடு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகளை தயாரிப்பதற்காக தகுதி வாய்ந்த மற்றும் போதியளவான பதவியணியொன்று நியமிக்கப்பட்டிருக்காமை |
| (இ) | பெறுகைகள் | பெறுகைகள் வழிகாட்டல், பெறுகைகள் கைநூல் மற்றும் பெறுகைகள் திட்டத்தின் படி செயற்படாமை. |